**ஹொரொவபொத்தான பிரதேச சபை**
**அநுராதபுர மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 21 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஹொரொவபொத்தான பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்க சபையினால் அட்டுறு அடிப்படையில் கணக்கு தயாரிக்கப்பட்டிருப்பதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் நீதிமன்றத் தண்டப்பணம், முத்திரைக் கட்டணங்கள் மற்றும் ஊழியர் கடன் வட்டி அந்த அடிப்படைக்கு புறம்பாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 ஆம் ஆண்டு முதல் சபையினால் பயன்படுத்தப்படும் புறநெகும செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடங்கள். வழங்கப்பட்டிருந்த கணணிகள் மற்றும் ஏனைய உபகரணங்களின் கூட்டுப் பெறுமதி ரூபா 44,245,000 தொகை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 ஆம் ஆண்டின் போது திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தினால் சபைக்கு வழங்கப்பட்ட ரூபா 224,750 பெறுமதியான 203 கல்வனைய் கொடிக் கம்பங்கள் கணக்கீடு செய்யப்படாமை காரணமாக நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்தில் பங்களிக்கும் கணக்கு அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) சபைக்கு சொந்தமான 17 இடங்களில் அமைந்துள்ள ஆதனங்களை குத்தகைக்கு வழங்கியதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கைகளின் பிரகாரம் ஆண்டில் அறவிடப்பட வேண்டிய மொத்த குத்தகை வாடகை ரூபா 4,554,740 ஆக இருந்த போதிலும் நிதிக் கூற்றுக்களில் அது ரூபா 4,502.507 என காண்பிக்கப்பட்ட காரணத்தினால் ஆண்டின் மிகை மற்றும் பெறவேண்டிய வாடகை ரூபா 52,233 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 103,202 ஆன அட்டுறு செலவினம் கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக ஆண்டின் செலவினம் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்கள் அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) 2018 ஆம் ஆண்டில் பணம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 85,000 தொகையான 03 செயற்திட்டங்கள் நிர்மாணக் கடன் கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தமை காரணமாக நிர்மாணக் கடன் கொடுத்தோர் மற்றும் மூலதன செலவினம் அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 25,255 பெறுமதியான 02 நிலையான சொத்து விடயங்கள் கணக்கீடு செய்யப்படாததன் காரணமாக நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்தில் பங்களிக்கும் கணக்கு அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டிற்காக குழாய் கிணறுகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய வருமானம் கணக்கிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 135,750 தொகை 2014 ஆம் ஆண்டில் ரூபா 178,950 என கணக்கீடு செய்யப்பட்ட முத்திரைக் கட்டணங்களில் முறையே ரூபா 122,250 மற்றும் ரூபா 155,000 வீதம் வழங்குவதற்கு மாகாண இறைவரி ஆணையாளரின் இணங்கியிருக்கையில் கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 37,450 ஆன தொகையை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்காக முத்திரைக் கட்டண வருமானத்தை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) சபையின் கீழ்வரும் மொரவெவ, வாகொல்லாகட மற்றும் சமகிகம ஆகிய இடங்களில் உள்ள 03 RO நீர் சுத்திகரிப்பு முறைமைகள் பதிவேடுகளுக்கு உட்படாதிருந்ததுடன் அவற்றின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிக்கூற்றுக்களில் வருமானம் மற்றும் செலவினக் கணக்கில் காண்பிக்கப்படும் வருமான விடயங்கள் மற்றும் பி.ச 04 இல் குறிப்பிடப்படும் வருமான மீதிகளுக்கு இடையே ரூபா 1,003,904 ஆன வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) நிதிக்கூற்றுக்களில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலையான சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்ட நூலகப் புத்தகங்களின் பெறுமதி ரூபா 2,035,095 ஆக இருந்த போதிலும் நூலக உதவி பயன்பாட்டு பதிவேட்டின் பிரகாரம் அத்திகதியில் பெறுமதி ரூபா 1,727,450 ஆக இருந்தமையால் ரூபா 307,645 ஆன வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

வருடக் கணக்காக நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்படும் ரூபா 83,385 கூட்டுத்தொகையான 02 இருப்பு மீதிகள் மற்றும் ரூபா 534,443 கூட்டுத்தொகையான செலுத்த வேண்டிய 05 மீதிகள் இணங்காணப்பட்டு தீர்வு செய்வதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 9,632,455 தொகையான 05 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

**1.3.6 இணக்கமிண்மைகள்**

**1.3.6.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டம் 177 ஆம் பிரிவு | சபையின் சேவை புரியும் தற்காலிக மற்றும் அமைய ஊழியர்களுக்காக பணிக்கொடை கொடுப்பனவிற்காக உத்தேச திட்டமொன்றை தாபிப்பதற்கு உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி | |
| (i) விதி 5.11 | சபைக்குச் சொந்தமான வழியில் காசு மற்றும் ஏனைய பெறுமதியான பொருட்கள் தொடர்பாக முறையான காப்புறுதி மேவுகையொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) விதி 33 | வீதவரி கொடுப்பனவை தவிர்ப்பு செய்யும் நபர்கள் தொடர்பாக பட்டியலொன்றும் ஆதனங்களை தடைசெய்யும் பிடியாணை ஒவ்வொரு காலாண்டிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) விதி 217 மற்றும் 218 | சபைக்குச் சொந்தமான சகல காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக பீஎஸ் 46 இன் பிரகாரம் பதிவேடொன்று பேணப்படாமல் இருந்ததுடன் சகல காணிகள் மற்றும் கட்டிடங்கள் ஒவ்வொரு ஆண்டிலும் பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) விதி 261.2 | ரூபா 50,000 ஆன செயல் நிமித்த கட்டுநிதியொன்று 2017 பெப்ரவரி 20 ஆந் திகதி உத்தியோகத்தரொரு வருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அம்முற்பணம் 2018 ஏப்ரல் 20 ஆந் திகதி வரை தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை நி.பி 571, 572 | சபையின் பொது வைப்புக்கள் பதிவேட்டின் பிரகாரம் 02 வருடங்களை கடந்த ரூபா 690,173 கூட்டுத்தொகையான திருப்பிச் செலுத்த வேண்டிய 34 வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஈ) | மோட்டார் போக்குவரத்து சட்டத்தின் 203 அதிகாரத்தின் 2(1) ஆம் பிரிவு | 2005 ஆம் ஆண்டு முதல் சபைக்கு கிடைத்திருந்த உழவு இயந்திரம், 02 டேலர்கள், நீர் பௌசர் என்பன 2018 ஏப்ரல் 20 ஆந் திகதி வரை பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | சபை பயன்படுத்தும் கணனி, உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முடிவடைந்த ஆண்டின் போது சபையின் சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,397,859 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,164,830 ஆகும்.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டியலிடப்பட்ட வருமானம். சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2017 சனவரி 01 இல் ஆரம்ப மீதி | 2017 இல் பட்டியலிடப்பட்ட வருமானம் | 2017 இல் சேகரிக்கப்பட்ட வருமானம் | | 2017 திசெம்பர் 31 இல் நிலுவை வருமானம் |
|---|---|---|---|---|---|
| | பெறுமதி | பெறுமதி | 2017.01.01 மீதியில் பெறுகை | 2017 பட்டியலிடப்பட்ட வருமான பெறுகை | பெறுமதி |
| | | | பெறுமதி | பெறுமதி | |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| நிலுவை வீதவரி | 129,152 | 56,129 | 20,894 | 27,715 | 136,672 |
| நிலுவை கழிவு | 910,100 | 321,600 | 136,900 | 172,700 | 922,100 |
| நிலுவை வாடகை | 1,747,030 | 444,000 | 320,300 | 111,100 | 1,759,630 |
| நிலுவை குத்தகை | 3,712,093 | 4,502,507 | 28,236 | 3,198,693 | 4,987,671 |
| நிலுவை அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,033,300 | 55,500 | - | 55,500 | 1,033,300 |
| நிலுவை நீதிமன்ற தண்டப் பணம் | 734,465 | 787,551 | - | - | 1,522,016 |
| நிலுவை முத்திரைக் கட்டணம் | 1,291,950 | 300,000 | - | - | 1,591,950 |
| நிலுவை குழாய் கிணறு கட்டணம் | 375,900 | 800 | 8,000 | 800 | 367,900 |
| மொத்தம் | 9,933,990 | 6,468,087 | 514,330 | 3,566,508 | 12,321,239 |

**2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றுகை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வருமானம் தொடர்பாக முறையான ஏடுகள் பராமரிக்கப்படாமை காரணமாக நிலுவை வருமான அலகுகளின் எண்ணிக்கை பட்டியலிடப்பட்ட வருமான அலகுகளின் எண்ணிக்கையை குறிப்பிடுவதற்கு சபை தவறியிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 6,468,087 ஆக இருந்த போதிலும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வருமானங்களின் கூட்டுத்தொகை ரூபா 12,321,239 ஆக இருந்தமையால் பட்டியலிடப்பட்ட வருமானத்தில் 190 சதவீதம் நிலுவை வருமானமாக காணப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 9,933,990 ஆன மொத்த நிலுவை வருமானத்தில் 5.17 சதவீதமான ரூபா 514,330 மாத்திரம் ஆண்டில் அறவிடப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட மொத்த வருமானம் ரூபா 6,468,086 ஆக இருந்த போதிலும் வருமானச் செலவினக் கணக்கில் அது ரூபா 9,755,194 ஆக காண்பிக்கப்பட்டமயால் ரூபா 3,287,108 ஆன இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது.

**2.2.3 வீதவரியும் வரியும்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வீதவரி பட்டியலிடல் ரூபா 55,752 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை வீத வரி ரூபா 136,672 ஆக இருந்தமையால் அது வருடாந்த பட்டியலிடலில் 245 சதவீதம் அளவிலான உயர்ந்த பெறுமதியாக இருந்தது. நிலுவை பணத்தை அறவிடுவதற்கு பிரதேச சபை சட்டத்தின் 158 பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபை அதிகாரப் பிரதேசத்தில் வீத வரி அறவிடப்படும் ஆதனங்களை 1994 ஆம் ஆண்டின் பின்னர் மதிப்பீடு செய்வதற்கு சபை நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 134 பிரிவின் பிரகாரம் அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்களாக பெயரிடப்பட்ட பிரதேசங்களில் வீதவரி அறவிடப்பட வேண்டிய இடங்களிலிருந்து வீதவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 வாடகை மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 2 தவணை முதல் 151 வரையான நிலுவை வாடகை வருமானங்களின் கூட்டுத்தொகை ரூபா 6,747,301 ஆக இருந்ததுடன் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை 159(1) சட்டத்தின் பிரிவின் பிரகாரம் நிலுவை வாடகையை அறவிடுவதற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருடக் கணக்காக நிலுவையாக முன்கொண்டு வரப்பட்ட நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் ரூபா 1,033,300 ஐ அறவிடுவதற்க மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மாடுகளுக்கு நோய் ஏற்பட்டமையால் மாதக் கணக்கில் குத்தகை இடங்கள் மூடப்பட்டமையால் ரூபா 83,735 கூட்டுத்தொகையை பதிவழிப்பதற்கு

தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக உள்ளூராட்சிமன்ற ஆணையாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 ஏனைய வருமானம்

#### (அ) கழிவுப் பொருள் கட்டண வரி

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 910,100 ஆன நிலுவை கழிவுப்பொருள் கட்டணம் ஆண்டின் இறுதி அளவில் ரூபா 922,100 ஆக இருந்ததுடன் நிலுவையை அறவிடுவதற்கு சபை எவ்வித வேலைத்திட்டமொன்றையும் தயாரித்திருக்கவில்லை.

#### (ஆ) குழாய் கிணறு கட்டணங்கள்

மீளாய்வாண்டின் இறுதியில் 169 குழாய் கிணறுகளிலிருந்து அறவிட வேண்டிய கட்டணங்கள் ரூபா 367,900 ஆக இருந்ததுடன் அக்குழாய் கிணறுகளில் இயங்கும் நிலைமையில் காணப்படும் கிணறுகள் தொடர்பான தரவுகள் சபையிடம் இல்லாமல் இருந்ததுடன் நிலுவையை அறவிடுவதற்கு சபை எவ்வித வேலைத்திட்டமொன்றையும் தயாரித்திருக்கவில்லை.

### 2.2.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

#### (அ) நீதிமன்றத் தண்டப்பணம்

மாகாண திறைசேரியிடமிருந்து 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,522,016 ஆக இருந்தது.

#### (ஆ) முத்திரைக் கட்டணங்கள்

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 1,291,950 ஆன நிலுவை முத்திரைக் கட்டணங்கள் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 634,375 ஆக இருந்தமையால் ரூபா 657,575 ஆன வேறுபாட்டிற்காக தகவல் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், மக்கள் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பான வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

#### (அ) உப விதிகள்

பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 28 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அவ் விடயங்களுக்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக சபையினால் செயல்நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) எதிர்பார்க்கப்பட்ட நிறைவு மட்டத்தை பெற்றுக்கொள்ளாமை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2011 ஆம் ஆண்டில் தேசிய கமநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வேலை ஆரம்பிக்கப்பட்ட வாகல்கட தேசிய நீர் முன்மொழிவு திட்டத்திற்காக ரூபா 3,544,028 செலவிடப்பட்டிருந்த போதிலும் வேலை பூர்த்தி செய்து பிரதேசத்தின் மக்களின் நீர் தேவைப்பாட்டை பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மீளாய்வாண்டின் இறுதி வரை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ரூபா 3,945,583 செலவிடப்பட்டிருந்த பிளிசறு செயற்திட்டத்தின் வேலைகள் 2017 ஆம் ஆண்டின் இறுதி முடிவடைந்திருந்த போதிலும் மின்சாரம் மற்றும் நீர் வழங்கல் மேற்கொள்ளப்படாத காரணத்தினால் 2018 ஏப்ரல் வரையிலும் பொது மக்கள் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) செயற்பாடுகளை நிறைவேற்றுவதில் தாமதம்**

மீளாய்வாண்டில் நிறைவேற்றுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட ரூபா 875,000 ஆன 05 செயற்திட்டங்கள் திசெம்பர் 31 ஆந் திகதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**(உ) சுற்றாடல் பிரச்சினைகள்**

ஹொரவப்பொத்தான வவுனியா வீதிக்கு அண்மித்த மொடகோநேவ பிரதேசத்தில் அரசின் காணியில் திறந்த வெளியில் நாளொன்றுக்கு சேரும் 02 தொன் அளவிலான கழிவுப்பொருட்கள் வெளியேற்றுவதால் சுற்றுப் பிரதேச மக்களின் வாழ்க்கைக்கு அதன் ஊடாக வெவ்வேறு சுகாதார சிக்கல்கள் தோன்றியிருந்த போதிலும் சபை அதற்காக நிரந்தர தீர்வை வழங்கியிருக்கவில்லையென்பது அவதானிக்கப்பட்டது.

**3.2 முகாமைத்துவ திறமையின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபையினால் பராமரிக்கப்படும் அரசின் காணிகள் மற்றும் 08 கட்டிடங்களுக்காக உள்ளுராட்சி மன்ற மற்றும் மறுசீரமைப்பு சுற்றறிக்கை இலக்கம் 03 இன் பிரகாரம் உரித்து உறுதி மற்றும் திட்ட வரைபடம் என்பவற்றை பெற்றுக்கொள்வதற்கும் அக்காணிகளின் எல்லைகளை காட்டி அவற்றை உறுதிப்படுத்துவதற்கும் அவற்றின் பெறுமதியை மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 மனித வள முகாமைத்துவம்**

சபையில் சேவை புரிந்து நீண்டகாலத்திற்கு முன்னர் ஓய்வுபெற்ற மரணித்த மற்றும் சேவையை விட்டுச் சென்ற 15 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 88,149 தொகையை அறவிடுவதற்கு தாபன விதிக்கோவையின் xxiv அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 செயற்பாட்டு திறமையின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபை அதிகாரப் பிரதேசங்களில் அமைந்துள்ள 70 மயானங்களுக்காக அரசின் காணி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 2006 நவம்பர் 14 ஆந் திகதிய பீ.எல்/07/01/53 ஆம் இலக்க உள்ளுராட்சி அதிகாரசபைகளை மீளமைத்தல்

சுற்றறிக்கை இலக்கம் 09 இன் முன்மொழிவுகள் மற்றும் பரிந்துரைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் சபையினால் 15 அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய இணக்கச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. அத்துமீறிய நிர்மாணங்களை பரீட்சிக்கும் நடைமுறையொன்று சபைக்கு இல்லாமல் இருந்ததுடன் அத்துமீறிய நிர்மாணம் காரணமாக எதிர்காலத்தில் சுற்றாடல் சிக்கல்கள் உருவாகக்கூடிய இயலுமை அவதானிக்கப்பட்டன.

(இ) ஹொரவப்பத்தான நகரில் ஆட்டிறைச்சிக் கடையை குத்தகைக்கு எடுத்த குத்தகையாளர் வியாபாரத்தை தொடர்ந்தும் மேற்கொள்ள முடியாது என 2017 சனவரி 25 ஆந் திகதிய கடிதமொன்றின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த ஆதனங்களை மீண்டும் குத்தகைக்கு வழங்க சபை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) குத்தகைக்கு எடுக்கப்பட்ட ஆதனங்களில் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதென அறிவிக்கப்பட்டிருந்த 5 வியாபார இடங்களிலிருந்து நிலுவை வாடகை ரூபா 1,256,440 தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.5 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

சபைக்கு சொந்தமான வாகனங்கள் மற்றும் 08 உ பபாகங்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் அவற்றை திருத்தி பயன்பாட்டிற்கு எடுக்கவோ திருத்தம் செய்வதற்கோ முடியாவிட்டால் கைதவிர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

முறையான எதிர்வுகூறல் ஒன்று இல்லாமல் பாதீடு தயாரிக்கப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டில் 03 வருமான விடயங்கள் மற்றும் உள்ளவாறான வருமானத்திற்கு இடையே 44 சதவீதத்திலிருந்து 62 சதவீதம் வரையான விலகலொன்றும் 06 செலவின விடயங்களில் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான செலவினங்களுக்கு இடையில் 14 சதவீதம் முதல் 70 சதவீதம் வரையான விலகல் அவதானிக்கப்பட்டன. அதன் பிரகாரம் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்படாமை அவதானிக்கப்பட்டது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

2015 மார்ச் 18 ஆந் திகதிய 04/2015 ஆம் இலக்க வடமேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரது சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தியின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், உள்ளகக் கணக்காய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் மூலம் விநியோகிக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
| --- | --- |
| (அ) வருமான சேகரிப்பு | i. வருமான மதிப்பீடு தயாரிக்கப்படாமை<br>ii. நிலுவை வருமான சேகரிப்பு செயற்திறனாக இன்மை<br>iii. ஆதனங்களை மதிப்பீடு செய்யப்படாமை |
| (ஆ) திட்டமிடல் | கூட்டிணைந்த திட்டம், செயல் நடவடிக்கை திட்டம் மற்றும் பெறுகை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) நிலையான சொத்துக்கள் | i சொத்துக்கள் பதிவேடுகளுக்கு உட்படுத்தாமை<br>ii. சபை பயன்படுத்தும் ஆதனங்களின் உரித்தினை கையேற்காமை<br>iii. விளைவற்ற சொத்துக்கள் காணப்பட்டமை. |
| (ஈ) உள்ளகக் கட்டுப்பாடு | உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்படாமை |